# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

இறந்தவர்களின் முகத்தைப் பார்க்கும் போது அந்த நபர் மிகுந்த அமைதியாக சாந்தியோடு சந்தோஷமாக உறங்குவது போல் நமக்கு தோன்றுகிறது. இதனால் நாம் அனைவரும் சாவு என்பது ஒரு சாந்தியான அனுபவம் என்று நினைக்கிறோம். ஒரு கவரிலிருந்து நாம் பணத்தை எடுப்பது போல், ஒரு மரத்திலிருந்து மிகப் பழுத்தப்பழம் தானே உதிர்வது போல் நம் ஆத்மா உடலை விட்டுப் பிரிந்து விடுகிறது என்று எண்ணுகிறோம். ஆனால் உண்மை அதுவல்ல. ஆத்மாவானது தான் எடுத்த சரீரத்தோடு பல இடங்களிலும் பஞ்ச பிராணனால் பிணைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பிணைப்புகளை அவிழ்த்து உயிரை உடலைவிட்டு, நீங்கும் போது அந்த ஆத்மா அளவில்லாத துன்பத்தை அனுபவிக்கிறது. காயத்தின் மேல் போடப்பட்ட பிளாஸ்த்திரி இறுக்கமாக ஒட்டிக் கொண்டால் அதைப் பிய்த்து எடுக்கும் போது மிகவும் வலிக்கிறதல்லவா? அதைப் போல பன்மடங்கு வேதனையை சாகும்போது ஒரு ஆத்மா உணர்கிறது. அதையெல்லாம் இறந்தவரின் முகம் காட்டுவதில்லை. முகத்திலிருந்து உணர்வுகள் ஒடுங்கிய பிறகு தான் இவ்வளவும் நடக்கிறது. இந்தச் செய்தியை ஸ்ரீமத் பாகவத்திலும் மற்ற புராணங்களிலும் பார்க்கிறோம்.

அதனால் தான் 'ஜனனம் துக்கம்' 'மரணம் துக்கம்' என்றார்கள். அதனால் தான் பெருமாளிடம் வரங் கேட்பது வைணவத்துக்கு பொருந்தாது என்ற வரம்பை மீறி 'அநாயாசேன மரணம்' (துன்பமில்லாத சாவு) வேண்டும் என்று முறையிட்டார்கள். பறவையேறும் அந்த பரமபுருஷனும் புள்ளூர்ந்து வந்து அவர்களைத் துன்பமின்றி அழைத்துக் கொள்கிறார். ஆனால் நமக்கெல்லாம் அந்த பாக்யம் கிடைக்குமென்று இறுமாந்து இருக்க முடியுமா? சாவு என்பது ஒரு சரசமான அனுபவம் என்று அலட்சியமாக வாழ்ந்து கொண்டிருக்கும் அன்பர்கள் இதைப் பற்றி சிந்திக்க ஒரு விநாடி ஒதுக்குவார்களா?

'இறந்தபின் நடப்பதென்ன?' என்ற கருடனின் கேள்விக்கு பதில் சொல்ல விழையும் அந்த பரந்தாமன் மரணத்திற்கு பிறகு 'பிரேத ஜென்மம்' என்ற ஒரு பிறவி காத்திருக்கிறது என்று ஒரு அணுகுண்டை தூக்கிப் போடுகிறார். ஏனென்றால் பிரேத ஜென்மம் என்பது மனித ஜென்மம் போல இன்னொரு சுமுகமான ஜென்மம் அல்ல. "ஆவியாய், பேயாய், பிசாசாய் அலைகிறான்" என்று நாம் பேச்சு வழக்கில் பேசிக் கொள்ளுகிறோமே– அந்த ஜென்மம் தான் பிரேத ஜென்மம். இந்த ஜென்மத்தில் இரவு பகலாக ஒரு மனிதன் பசி தாங்காமல் குடி தண்ணீர் இல்லாமல் அடையும்

துன்பத்துக்கு அளவில்லை. 'அப்படி ஆவியாய் அலையும் போது அது பலகாரக் கடைகளிலும் வீடுகளின் சமையல் அறைகளிலும் புகுந்து சாப்பிட வேண்டியது தானே, அல்லது குளங்களின் தண்ணீரைக் குடித்து தாகம் தீர வேண்டியது தானே' என்கிறீர்களா? அதுதான் முடியாது.

பூட்டி இருக்கிற கதவைச் சாவி போட்டுத் திறக்காமல் அல்லது உடைக்காமல் ஒரு வீட்டுக்குள் நாம் எப்படி நுழைய முடியாதோ அது போல இப்படி அலையும் ஆவிகளுக்கு நிறைய தடைகள் உண்டு. அவைகள் இஷ்டப்படி உணவை எடுத்துச் சாப்பிட, முடியாது, தண்ணீரைக் குடிக்க முடியாது. ஆங்காங்கே இறைவனுடைய ஊழியர்கள் தடை சொல்லிக் காத்து நிற்பார்கள். இந்தப் பிரேதங்களுக்கென்று அவற்றின் பெயரைச் சொல்லி யாராவது ஏதாவது கொடுத்தாலே யன்றி அவைகளுக்குக் காட்டு மரத்தின் பழம் கூட கிடைக்காது. எதையும் தொட அவைகளுக்கு உரிமையில்லை.

இந்த பிரேதஜென்மம் முடிந்தவுடன் அடுத்து வரும் பிறப்பாவது நல்ல பிறப்பாக இருக்கும் என்று நினைக்கிறீர்களா? இந்தப் பிரேத ஜென்மங்கள் அடுத்துப் பிறக்கும் போது புழுக்களாகவும், சாக்கடைக் கிருமிகளாகவும் பிறப்பார்கள். அந்தப் பிறவிகளிலே மல மூத்திரங்களைத் தின்று மற்றவர்களால் மிதிபட்டு நசுங்கி தம் இனத்தாராலேயே தின்னப்பட்டு அருவருக்கத்தக்க முறையில் சாவை அடைவார்கள்.

அதன் பிறகு மனித குலத்திலே மகா மட்டமான குடும்பங்களிலே அவர்கள் பிறப்பார்கள். மட்டமான என்று நாம் சொல்லும் போது நான் எந்த பொருளிலே சொல்லுகிறேன் என்று நீங்கள் கவனிக்க வேண்டும். பொருளாதாரக் குறைவையோ, அழகுக் குறைவையோ, மற்ற வசதிக் குறைவையோ, நான் மட்டம் என்று சொல்லவில்லை. ஏனென்றால் பெரிய மகான்களும் அப்படிச் சூழலில் பிறந்து புனிதர்களாய் வாழ்ந்து உலகை உயர்த்தி இருக்கிறார்கள். ஆனால் ஒரு ஆத்மா மனித சரீரம் எடுத்து அது மனிதனாய் வாழ்ந்து உய்வடைய வேண்டுமானால் நல்ல பண்புள்ள குடும்பத்தில் பிறக்க வேண்டும். நன்மை எது தீமை எது என்று பகுத்துப் பார்த்து நல்ல பாதையில் சென்று உயர்வடைய வேண்டும். அதற்கு வாய்ப்பில்லாத குடும்பத்தைத் தான் மட்டமான குடும்பம் என்கிறேன். இந்தப் பிரேத ஜென்மமும் மற்ற இழி பிறப்புக்களும் உங்களுக்கும் உங்கள் முன்னோர்களுக்கும் நேராமல் தப்பிக்க வேண்டுமா? அதற்கான வழியை அடுத்து பெருமாள் கூறுகிறார். அடுத்த இதழில் சந்திப்போம்.

(தொடரும்)

**GEETHACHARYAN**

**Available in Digital Form in the internet. For details log at**

**www.sangapalagai.com**

**For old issues log at**

**www.vanamamalai.org**